# பொதுக்காலம் 24 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். 50:5-9,

பதிலுரைப்பாடல்: திபா. 116:1-6,8-9,

திருத்தூதர் யாக்கோபு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 2:14-18,

மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 8: 27-35

## திருப்பலி முன்னுரை:

மீட்புக்குரியவர்களே,

இறைமகன் இயேசுவில் இன்றைய திருப்பலி வழிபாட்டில் பங்கேற்றுக்கொண்டிருக்கும் இறைமக்கள் அனைவருக்கும் என் எளிமையான வாழ்த்துக்கள் உரித்தாகுக. பொதுக்காலத்தின் இருபத்துநான்காம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு நமது சிலுவையை சுமந்து கொண்டு ஆண்டவரைப் பின்பற்ற நமக்கு அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்தவ வாழ்வென்பது ஒரு சீடருக்குரிய வாழ்வு. அற்புதங்களையும், அதிசயங்களையும் எதிர்பார்க்காமல், இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பயணத்தைப் பின்தொடர நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அரச அதிகாரத்தோடு கூடிய மெசியாவை அல்ல, சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவை நாம் பின்பற்ற வேண்டும் என்பதே கடவுளின் திருவுளம் என்பதை நினைவில் கொண்டு வாழ நாம் அழைக்கப்படுகிறோம். இறையாட்சியின் இலட்சியங்களுக்காக நம்மை முழுவதும் இழந்து கடவுளின் அரசை இவ்வுலகில் நிலைநாட்டும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. மீட்பு அளிப்பவராம் இறைவா,**

உம் திருமகனின் சிலுவைப்பாதையைப் பின்பற்றி உலகில் நீதியையும், அமைதியையும் நிலைநாட்டுபவர்களாக வாழும் வரத்தை, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் அளித்து, உமது திருச்சபையை மீட்பின் பாதையில் வழி நடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. நம்பிக்கை தருபவராம் இறைவா,**

உலக மக்கள் அனைவரும் உம் திருமகனின் சிலுவை மரணத்தின் முக்கியத்துவத்தை உணரவும், அவரது சிலுவையின் வழியாக நீர் செயல்படுத்திய மீட்புத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவும் தேவையான மனதை அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. வாழ்வை வழங்குபவராம் இறைவா,**

உமது மக்களாகவும், உம் திருமகனின் சீடர்களாகவும் வாழ அழைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும், பசி, நோய், துன்பம் போன்றவற்றால் வேனையுறும் மக்களுக்கு பணியாற்றி, புதுவாழ்வு அளிக்க உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**4. மண்ணுலகில் மனித நேயத்தை வளர்த்த எம் அன்புத் தந்தையே இறைவா,**

உம்மிடம் நல்லவற்றைப் பெற்றுக் கொண்டு வாழ விரும்பும் நாங்கள் மண்ணில் மனித நேயம் மலரவும், மனித மாண்புத் தழைத்தோங்க உமது தூய ஆவியின் கனிகளைப் பெற்ற மக்களாக வாழ வரம் அருள வேண்டுமென்ற இறைவா உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

**5. எல்லாருக்கும் எல்லாம் ஆன எம் அன்பு இறைவா!**

யாரும் நினையாத ஆன்மாக்களுக்கும், மரணத்தறுவாயிலுள்ள துன்புறும் அன்பர்கள் அனைவரும் இறைமகன் இயேசுவின் நிலையான அமைதியையும், பேரின்பவீட்டின் இன்பத்தையும் முழுமையாகப் பெற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**6. எல்லாரும் எல்லாம் பெற விரும்பும் அன்பு இறைவா!**

இச்சமுதாய முன்னேற்றத்தில் உறுதுணையாக உள்ள எம் ஆசிரியர் பெருமக்களை நிறைவாக ஆசீர்வதித்து அவர்கள் அருள் வாழ்வில் சிறந்து விளங்கிடவும், சிறந்த நல்சான்றோர்களை இவ்வுலகிற்கு இன்னும் அதிகமாக வழங்கிடத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.